## பெரும்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

## முன்னிலை திருமதி. N. முத்துலட்சுமி நாகராஜன் அவர்கள்

ந.க.எண்: 02 நாள் : 13.03.2024

பொருள் : மனைப்பிரிவு - காணை ஒன்றியம் - பெரும்பாக்கம் கிராமம் ச.எண் 324/4 ல் 2.20 ஏக்கர் (அ) 8900 ச.மீ பரப்பளவு கொண்ட புதிய மனைப்பிரிவுக்கான இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடுதல் - சார்பு

பார்வை :

1. அரசாணை எண் 79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD(3) துறை நாள்: 04.02.2019
2. நகர ஊரமைப்பு இயக்குநர், விழுப்புரம் மாவட்டம் அவர்களின் ந.க.எண் ROC No. TNEC5CWN/2024/TCP நாள்: 08.01.2024
3. பெரும்பாக்கம் ஊராட்சி தீர்மான எண் : 121 நாள்: 13.03.2024
4. தானப்பத்திரம் ஆவண எண் 7070/2023 நாள்: 26.12.2023
5. கருவூலம் தலைப்பில் இணையதளத்தின் வாயிலாக மற்றும் வங்கியின் மூலமாக செலுத்தப்பட்டது. செலுத்துச்சீட்டு எண்.20240227012709 நாள்: 27.02.2024

உத்தரவு :

காணை ஊராட்சி ஒன்றியம் , பெரும்பாக்கம் கிராமம் ச.எண் 324/4 ல் 2.20 ஏக்கர் (அ) 8900 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தினை மனைப்பிரிவுகளாக ஒப்புதல் வழங்க பார்வை (1)- ல் காணும் அரசாணையில் தெரிவித்துள்ள வழிகாட்டி நெறிமுறைகளின்படியும், பார்வை (2) - ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மாவட்டம் அவர்களின் நடவடிக்கையின் வாயிலாக ஒப்புதல் கடிதம் வரப்பெற்றுள்ளது.

பார்வை (3) - ல் மற்றும் 4-ல் காணும் ஊராட்சியின் தீர்மான மற்றும் தானபத்திரம் அமைந்துள்ள இடத்தினை ஸ்தல ஆய்வு செய்து மனைப்பிரிவு ஒப்புதல் அனுமதி வழங்குமாறு தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

பார்வை (5)-ல் காணும் விவரப்படி நஞ்செய் வகைப்பாட்டில் இருந்து மாவட்ட ஆட்சியர் தடையின்மை சான்று பெற்று மனையாக மாற்ற அனுமதி கோரும் இடத்தில் சந்தை மதிப்பில் 3% தொகை நில பயன் மாற்ற கட்டணமாக உரிய அரசு கருவூலம் தலைப்பில் இணையத்தளம் வழியாக செலுத்தி அதற்குண்டான கட்டணம் ரூ. 29,040 (இருபத்து ஒன்பதாயிரத்து நாற்பது மட்டும்) மற்றும் கூராய்வு கட்டணம் ரூ. 50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) பஞ்சாயத்து வங்கி கணக்கில் செலுத்தி அதற்குண்டான ஆவணங்கள் பின்வரும் விவரப்படி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசுத்தலைப்பு :

| வ.எண் | விஸ்தீரணம் | சார்பதிவாளர் சந்தை மொத்த மதிப்பு | 3 % நில மாற்று ரூ கூறாய்வு கட்டணம் ரூ. 29,040 ரூ. 50,000 |
|---|---|---|---|
| 1. | 2.20 ஏக்கர் (அ) 8900 ச.மீ | ரூ. 9,68,000 | கூடுதல் ரூ. 79,040 |

<u>நிபந்தனைகள்:</u>

1. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பலிசீனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின், மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புயின்றி ரத்து செய்யப்படும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.
2. மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கு நகர ஊரமைப்புத்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அனுமதி பெற வேண்டும். மேலும் நீர்நிலைகள் மற்றும் அரசுக்கு சொந்தமான இடங்கள் என

தெரியவந்தால் எவ்வித முன்னறிவிப்புமின்றி அனுமதி ரத்து செய்யப்படும்.

3. மேற்படி புதிய மனைப்பிரிவிற்கு தார்சாலை, தெருக்களின் பெயர் பலகைகள் ஆகியன அமைக்கப்பட்டு தானமாக விழுப்புரம் சார்பதிவாளர் ஆவண எண் 7070/2023 நாள்: 26.12.2023 ன் படி ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது உரிமையாளர் தனது சொந்த செலவில் சரி செய்து தர வேண்டும்.
4. மேற்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு பெரும்பாக்கம் கிராம் ச.எண் 324/4 ல் 2.20 ஏக்கர் (அ) 8900 ச.மீ பரப்பளவில் அமைந்துள்ள மனைகளுக்கு மட்டும் இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

N.முத்துலட்சுமி
தலைவர்
ஊராட்சி மன்றம்
பெரும்பாக்கம் ஊராட்சி
காணை ஒன்றியம்

பெறுநர்

N.K. சௌந்தர்ராஜன்
நெ. 11/169, லால் பகதூர் சாஸ்திரி
11வது தெரு,
G.K.M காலனி,
சென்னை - 600082.

நகல்:

1. உதவி இயக்குநர், (ஊராட்சிகள்) விழுப்புரம் அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.
2. உதவி இயக்குநர், (நகர்ஊரமைப்பு) விழுப்புரம் அவர்களுக்கு தகவலுக்கா பணிந்தனுப்பப்படுகிறது.
3. சார்பதிவாளர் அவர்கள், விழுப்புரம் சார்பதிவகம்
4. வட்டாட்சியர் அவர்கள், விழுப்புரம் மாவட்டம்.

## பெரும்பாக்கம் ஊராட்சி

## காணை ஊராட்சி ஒன்றியம்

2024 வருடம் மார்ச் மாதம் 13ஆம் தேதி காலை 11.00 மணிக்கு பெரும்பாக்கம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.N.முத்துலட்சுமி நாகராஜன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஊராட்சிமன்ற சாதாரணக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

| | |
|---|---|
| **பொருள் :**<br>காணை ஊராட்சி /ஒன்றியம், பெரும்பாக்கம் கிராமம் ச.எண் 324/4 ல் 2.20 ஏக்கர் (அ) 8900 ச.மீ பரப்பளவில் அமைந்துள்ள மனைப்பிரிவிற்கு மனை எண்கள் 01 முதல் 50 வரை உள்ள புதிய மனைப்பிரிவுக்காக ஒப்புதல் வழங்க ஊராட்சிமன்ற அனுமதி கோரல் | **தீர்மானம் எண்:** 121<br>நாள்: 13.03.2024<br>அனுமதிக்கப்பட்டது. |

N.முத்துலட்சுமி
தலைவர்
ஊராட்சி மன்றம்
பெரும்பாக்கம் ஊராட்சி
காணை ஒன்றியம்.